வருடாந்த அறிக்கை 2022

குற்றத்தால் பலியானவர்களையும்
சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான
தேசிய அதிகார சபை

உள்ளடக்கம்

பக்க இலக்கம்

01. அறிமுகம் 04

02. அதிகார சபையின் தூரநோக்கும் செயற்பணியும் 05

03. அதிகார சபையின் குறிக்கோள்களும் பணிகளும் 06-07

04. அதிகார சபையின் நிறுவனக் கட்டமைப்பும் பதவியணியும் 08-12

05. செயலாற்றுகை

5.1 சட்ட மற்றும் சட்ட அமுலாக்கல் பிரிவு 13-15

5.2 பாதுகாப்புப் பிரிவு 16-17

5.3 கொள்கை மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் பிரிவு 18-29

5.4 நிருவாக மற்றும் முகாமைத்துவப் பிரிவு 30-31

5.5 நிதிப் பிரிவு 32

06. கணக்காய்வு அறிக்கையும் நிதிக் கூற்றுக்களும் 33-60

07. செயலாற்றுகை வளர்ச்சிக்கான உரிய நடுத்தர கால /குறுங்கால திட்டங்கள் 61-62

01.அறிமுகம்

2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான சட்டத்தின் கீழ் குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை தாபிக்கப்பட்டுள்ளது. குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான சட்டம் சட்டமுறையான கட்டமைப்பையும் மற்றும் வேலைத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தி குற்றவியல் மற்றும் நீதி செயல்முறைகளை வலுப்படுத்த பாராளுமன்றத்தால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும், உரிமைகோரல்களையும் மேம்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியன இந்த தேசிய அதிகார சபை தாபிக்கப்பட்டமைக்கான முதன்மை நோக்கங்களாகும். இவை தவிர, குற்றத்தால் பலியானவர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக ஏற்படும் பாதிப்புகளுக்கு இழப்பீடுகளை வழங்க தேவையான பாதுகாப்பு நிதியை பராமரிப்பதும், குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் பாதுகாப்பையும், பிற நிவாரணங்களையும் பெற்றுக் கொடுப்பதும், அத்துடன் குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சிகளுக்கும் எதிராக புரியப்பட்ட தவறுகளை விசாரித்து அத்தகைய தவறுகளுக்கு தண்டனைகளை வழங்குவதும் இந்த அதிகார சபையின் நோக்கமாகும்.

இதற்கமைய, பொது மக்களிடம் இருந்து கிடைக்கும் முறைப்பாடுகளை ஆராய்ந்து, முறைப்பாடுகள் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்படும் தலைமை சபைக்கு அனுப்பப்பட்டு அந்தத் தலைமை சபையின் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படும். மேலும், குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் பாதுகாப்பின் நிமித்தம் கிடைக்கும் கோரிக்கைகள் இந்த அதிகார சபையுடன் தொடர்புடைய பொலிஸ் உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவுக்கு அனுப்பப்பட்டு அச்சுறுத்தல்கள் பற்றிய மதிப்பீடுகள் நடத்தப்பட்டு, அச்சுறுத்தல்களின் தன்மைக்கு ஏற்ப குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது. மேலும், நீதிமன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்ளும் வகையில் குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சிகளுக்கும் இந்த தேசிய அதிகார சபையினால் பாதுகாபும் வழங்கப்படுகின்றது. மேலும், சமகால கட்புல மற்றும் செவிப்புலத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பல இடங்களில் இருந்து பாதுகாப்பாக சான்றுகளையும் மற்றும் சாட்சிகளையும் பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளும் இந்த அதிகார சபையால் செய்து கொடுக்கப்படுகின்றன.

இதன்படி, 2022 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குள் விசாரணைக்குட்படுத்தப்பட்ட 379 முறைப்பாடுகளுக்கு மேலதிகமாக, 2022 ஆம் ஆண்டில் பொது மக்களிடமிருந்தும் மற்றும் பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் 259 முறைப்பாடுகள் இந்த அதிகார சபைக்கு கிடைத்துள்ளன. மொத்த முறைப்பாடுகளில், பாதுகாப்பு கோரிக்கைகள் விசாரிக்கப்பட்டு, 84 பேருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் விசாரணைகள் முடிவடையும் வரை 86 பேருக்கு இடைக்கால பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இவை தவிர, 2022 ஆம் ஆண்டில் கிடைத்த உரிமைகளுக்கும் மற்றும் உரிமை மீறல்களுக்குமான 80 கோரிக்கைகளில் 56 கோரிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இந்த முறைப்பாடுகள் தொடர்பான வழக்குகளின் தன்மை மற்றும் நிறைவு பெறாதுள்ள நீதிமன்ற நடவடிக்கைகள் போன்ற காரணிகளைப் பொறுத்து, இந்த முறைப்பாடுகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு எடுக்கும் கால நேரம் வித்தியாசப்படாம்.

இது தவிர, 2022 ஆம் ஆண்டில், சமகால கட்புல மற்றும் செவிப்புல இணைப்புகளைப் பயன்படுத்தி சான்றுகளையும் மற்றும் சாட்சிகளையும் பாதுகாப்பாக பெற்றுக் கொள்வது மற்றும் குற்றத்தால் பலியானவர்களின் பாதிப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு குற்றத்தால் பலியானவனர்களுக்கு செலவுகளுக்கான பணமும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் கோரிக்கைகளையும் மேம்படுத்துவதற்காக இந்த ஆண்டு அரச அதிகாரிகளுக்கான விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன.

அதற்கமைய, 2022 ஆம் ஆண்டில் இந்த அதிகார சபையினால் அடையப்பட்டுள்ள செயலாற்றுகை பற்றிய விபரங்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

02.அதிகார சபையின் தூரநோக்கும் செயற்பணியும்

✓ **தூரநோக்கு**

குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாக்கும் ஓர் இலங்கை

✓ **செயற்பணி**

குற்றத்தால் பலியானவர்களினதும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் உரிமைகோரல்களையும் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல், செயல்வலுப்பெறச்செய்தல் மற்றும் செயற்படுத்துதல்

03. அதிகார சபையின் குறிக்கோள்களும் பணிகளும்

3.1 குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் நோக்கங்கள்

1. குற்றத்தால் பலியானவர்களின் உரிமைகளையும் மற்றும் கோரிக்கைகளையும் இனங்கண்டு ஊக்குவித்தல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய முறைப்பாடுகளை விசாரித்து சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துதல்.
2. சாட்சியாளர்களின் கூற்றுக்களை இனங்கண்டு, அவற்றுடன் தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்து, சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துதல்.
3. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சிகளுக்கும் தேவையான உதவியையும் மற்றும் பாதுகாப்பையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.
4. குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சிகளினதும் உரிமைகள், உரிமைகோரல்கள் பற்றி பொது அதிகாரிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
5. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சிகளுக்கும் எதிரான குற்றங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகளை எடுத்தல்.
6. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சிகளுக்கும் உரிய நஷ்ட இழப்பீட்டு நிதியைப் பேணுதல் மற்றும் பயன்படுத்துதல்.
7. குற்றங்களை குறைத்தல் மற்றும் ஆராய்ச்சிகளை நடத்துதல்.
8. குற்றங்களுக்கான தண்டனைக்கு மாற்றுவழியாக குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை அதிகரித்தல் மற்றும் அதற்கான சிபாரிசுகளை முன்வைத்தல்.

3.2 குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் கடமைகளும் பணிகளும்

1. குற்றத்தால் பலியானவர்களின் உரிமைகளையும் உரிமைகோரல்களையும் இனங்கண்டு பாதுகாப்பளித்தல் மற்றும் ஊக்குவித்தல்.
2. சாட்சியாளர்களின் உரிமைகளை இனங்கண்டு, பாதுகாப்பளித்தல் மற்றும் மேம்படுத்துதல்.
3. குற்றத்தால் பலியானவர்களின் அல்லது சாட்சியாளர்களின் உரிமைகள் அல்லது உரிமை மீறல்கள் தொடர்பாக கிடைக்கின்ற முறைப்பாடுகளை விசாரித்து அவை தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல்.
4. குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் சிகிச்சை, இழப்பீடு, மறுசீரமைப்பு மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றிற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

5. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் நஷ்டஈடுகளை பெற்றுக் கொடுத்தல்.
6. இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களினால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சிகளினதும் உரிமைகள், உரிமைகோரல்கள் பற்றி பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
7. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் பாதுகாப்பை வழங்கவும், தேவையான சிகிச்சை, புனர்வாழ்வு மற்றும் ஆலோசனை உள்ளிட்ட உதவிகளை வழங்கவும் அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
8. குற்றத்தால் பலியானவர்களினதும் சாட்சிகளினதும் உரிமைகள் மற்றும் உரிமைகோரல்கள் புனர்வாழ்வு என்பன தொடர்பாக பிற நிறுவனங்களின் கொள்கைகளுக்கும் மற்றும் பிற நடைமுறைகளுக்கும் திருத்தங்களை சிபாரிசு செய்தல்.

9. ஒவ்வொரு அதிகார சபையிலிருந்து அல்லது ஆணைக்குழுவிலிருந்து அல்லது எவரேனும் நபரிடமிருந்து கிடைக்கும் கோரிக்கையின் பேரில் ஒரே நேரத்தில் கட்புல மற்றும் செவிப்புல தொடர்பாடல் முறைமையின் ஊடாக சான்றுகளை பெற்றுக் கொள்ளும் சுதந்திரம் மற்றும் உதவி வழங்குதல் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொடுத்தல்.

10. எந்தவொரு நீதிமன்றத்திலிருந்து அல்லது ஆணைக்குழுவிலிருந்து அல்லது வேறு எந்த நபரிடமிருந்து கிடைக்கும் கோரிக்கையின் பேரில் சமகால கட்புல மற்றும் செவிப்புல ஊடக வசதிகளின் ஊடாக சாட்சியங்களை பெற்றுக் கொள்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விதிமுறைகளின்படி வசதிகளை செய்துகொடுத்தல்.

11. குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சிகளினதும் வயது, பாலினம், இயலாமை அல்லது பிற விஷேட தேவைகளின் சாத்தியமான தீங்குகள் மற்றும் குற்ற சம்பவங்களைக் குறைப்பதற்கான வழிகள் மற்றும் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தல் என்பன பற்றி பொது அதிகாரிகளுக்கு அறியப்படுத்துதல்.
12. தண்டனைக்கு பதிலாக குற்றத்தால் பலியானவர்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளின் வளர்ச்சியுடன் தொடர்புடைய சிபாரிசுகளை முன்வைத்தல்.
13. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சிகளுக்கும் உதவி வழங்கும் திட்டங்களை மேம்படுத்துதல், பயன்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
14. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கான பிரிவை பேணி, உரிய ஆலோசனைகளை வழங்குதல்.

04. அதிகார சபையின் நிறுவனக் கட்டமைப்பும் பதவியணியும்

4.1 அதிகார சபையின் முகாமைத்துவ சபை

ஜனாதிபதி நியமித்த உறுப்பினர்கள் பின்வருமாறு:-

1. தலைவர்: - ஜனாதிபதி சட்டத்தரணி திரு சுகத கே. கமலத்
   ஓய்வுபெற்ற மண்றாடியார் நாயகம்
   சட்டமா அதிபர் திணைக்களம்



2. மருத்துவர் திரு அஜித் தென்னகோன்
   நீதிமன்ற தலைமை மருத்துவ அதிகாரி



3. மருத்துவர் திரு நீல் பெர்னாந்து
   உளவியல் மருத்துவ நிபுணர்



4. சட்டத்தரணி திரு சமன் சேனாதீர



5. சட்டத்தரணி திரு விமல் குமார[1]
6. சட்டத்தரணி திரு இந்திக பெரேரா[2]

உத்தியோகபூர்வ நியமனம் பெற்ற உறுப்பினர்கள் பின்வருமாறு: -

1. ஜனாதிபதி சட்டத்தரணி திரு சுசந்த பாலபட்டபெந்தி
   மேலதிக மண்றாடியார் நாயகம்
   சட்டமா அதிபர் திணைக்களம்



2. திரு அஜித் ரோஹண[3]
   சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்



திரு கமல் சில்வா[4]

[1] செப்டம்பர் முதல் டிசம்பர் 2022 வரை
[2] செப்டம்பர் முதல் டிசம்பர் 2022 வரை
[3] ஜனவரி முதல் மே 2022 வரை
[4] ஜூன் முதல் டிசம்பர் 2022 வரை

சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்

குற்றவியல் மற்றும் வாகனப் போக்குவரத்து கட்டுப்பாடு

பொலிஸ் தலைமை அலுவலகம்



3. திரு நாமல் கருணாசிறி
ஆணாயாளர்
மனித உரிமைகள் ஆணைக்குழு



4. சட்டத்தரணி திருமதி பியுமன்தி பீரிஸ்

மேலதிக செயலாளர் (சட்டம்)

நீதி அமைச்சு



5. திருமதி என்.எச்.எம்.டப்ளியூ.என். ஹேரத் குமாரி

மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)

மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சு



6. திருமதி எம்.எஸ்.பி. சூரியப்பெரும
மேலதிக செயலாளர் (சட்டம் மற்றும் சமாதானம்) (பதில்)
பாதுகாப்பு அமைச்சு

அவதானிப்பாளர் (திறைசேரிப் பிரதிநிதி)

திருமதி எஸ்.ஏ.சி. குதிலக்க[5], பணிப்பாளர் நாயகம்

திருமதி பி.எல்.ஜே. குணரத்ன[6], பணிப்பாளர் (சட்ட விகாரங்கள்)

முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்,

நிதி, பொருளாதார மற்றும் கொள்கை திட்டமிடல் அமைச்சு

[5] 2022 சனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை
[6] 2022 செப்டம்பர் மாதம் முதல் திசம்பர் மாதம் வரை

4.2 2022 ஆம் ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள்

1. திருமதி எஸ்.ஏ.சி. குலதிலக்க[7] - தலைவர்
2. திருமதி பி.எல்.ஜே. குணரத்ன[8], பணிப்பாளர் (சட்ட விவகாரங்கள்)
   பணிப்பாளர் நாயகம்,
   முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்,
   நிதி, பொருளாதார மற்றும் கொள்கை திட்டமிடல் அமைச்சு

   திருமதி பியுமன்தி பீரிஸ் - உறுப்பினர்
   மேலதிக செயலாளர்
   நீதி அமைச்சு

3. திருமதி எம்.எஸ்.பி. சூரியஆராச்சி - உறுப்பினர்
   மேலதிக செயலாளர் (சட்டம் மற்றும் சமாதானம்) (பதில்),
   பாதுகாப்பு அமைச்சு
4. சட்டத்தரணி திரு சமன் சேனாதீர - உறுப்பினர்
   சட்டத்தரணி திரு விமல் குமார[9]
5. திருமதி சுஜீவா பெரேரா - பிரதிநிதி
   தேசிய கணக்காய்வு அலுவலகம்

6. சம்பா பாளசூரிய - அவதானிப்பாளர்
   நீதி அமைச்சு


[7] ஜனவரி முதல் மார்ச் 2022 வரை
[8] மார்ச் முதல் டிசம்பர் 2022 வரை
[9] ஜனவரி முதல் ஆகஸ்ட் 2022 வரை

4.3 குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை
பதவியணி பற்றிய விபரம்

வகுதி	சம்பளக் குறியீடு	அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணி	தற்போதுள்ள ஆளணி	நிலவும் வெற்றிடம்
சிரேஷ்ட மட்டம்				
பணிப்பாளர் நாயகம்	HM 2-3	1	1	0
பணிப்பாளர்	HM 1-3	6	4	2
உதவிப் பணிப்பாளர்	MM 1-3	3	3	0
முகாமைத்துவ சபை செயலாளர்	MM 1-3	1	1	0
மூன்றாம் மட்டம்				
சட்ட உத்தியோகத்தர்	JM 1-1	3	1	2
உள்ளகக் கணக்காய்வாளர்	JM 1-1	1	0	1
விசாரணை உத்தியோகத்தர்	MA 4	6	5	1
அரவணைப்பு உத்தியோகத்தர்	MA 4	10	0	10
தொடர்பாடல் உத்தியோகத்தர்	MA 4	1	0	1
தகவல் உத்தியோகத்தர்	MA 4	1	0	1
மொழிபெயர்ப்பாளர்	MA 4	1	1	0
இரண்டாம் மட்டம்				
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத)	MA 1-1	09	6	3
அரவணைப்பு இல்லப் பொறுப்பாளர்	MA 1-1	01	0	1
ஆரம்ப மட்டம்				
சாரதி	PL 3	6	6	0
அலுவலக உதவியாள்	PL 1	6	6	0
மொத்தம்		**56**	**34**	**22**

-அட்டவணை 01-

4.4 குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் நிறுவனக் கட்டமைப்பு



05. செயலாற்றுகை

5.1 சட்டம் மற்றும் சட்ட அமுலாக்கல் பிரிவு


குற்றத்தால் பலியானவர்களினது அல்லது சாட்சியாளர்களினது உரிமை/உரிமைகோரல் மீறுகை அல்லது உடனடி மீறுகை தொடர்பாக கிடைத்த ஏதாவதொரு முறைப்பாடு/தகவல் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுதல் மற்றும் பாதுகாத்தல் சட்டத்தின் கீழ் குற்றத்தால் பலியானவர்களினதும் உரிமைகளையும் உரிமைகோரல்களையும் இனங்காணுதல், பாதுகாப்பளித்தல், ஊக்குவித்தல் மற்றும் உறுதிசெய்தல் ஆகியவற்றின் நிமித்தம் செய்யப்பட்ட கூறப்பட்ட மீறுகைகள் தொடர்பாக விசாரணை செய்தல் மற்றும் சட்ட நடவடிக்கையை எடுத்தல் முதலிய பணிகள் சட்டம் மற்றும் சட்ட அமுலாக்கல் பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2022 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை, பொது மக்களும் மற்றும் அரச நிறுவனங்களும் அனுப்பி குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்தத் தேசிய அதிகார சபைக்கு கிடைத்திருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 259[10] ஆகும்.

5.1.1 - 2022 ஆம் ஆண்டு கிடைத்த முறைப்பாடுகள் - பிரதேச ரீதியில்:

மாகாணம்	எண்ணிக்கை
மேல் மாகாணம்	125
தென் மாகாணம்	37
மத்திய மாகாணம்	21
வடக்கு	13
வட மத்திய மாகாணம்	12
வடமேல் மாகாணம்	16
சபரகமுவ மாகாணம்	16
கிழக்கு மாகாணம்	06
ஊவா மாகாணம்	09
மொத்தம்	**255**

அட்டவணை - 02



வரைபடம் - 01

5.1.2 - முறைப்பாடுகளின் வகை:

இந்த அதிகார சபைக்கு செய்த முறைப்பாடுகள், 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் உதவும் மற்றும் அவர்களை பாதுகாக்கும் சட்டத்தின் 3, 4 ஆம் பிரிவுகளுக்கு இணங்க குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமை/உரிமைகோரல் மீறுகை தொடர்பாக மற்றும் 8,9 ஆம் பிரிவுகளுக்கு

[10] பெயர் குறிப்பிடப்படாத முறைப்பாடு 01 , சபையின் மூலம் குறிப்பீடுசெய்த முறைப்பாடுகள் 02 மற்றும் வெளிநாடுகளிலிருந்து குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள முறைப்பாடு 01 ஆகியன அடங்கலாக 259.

இணங்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் எதிராக புரியப்பட்டுள்ள குற்றங்களின் பேரில், முறைப்பாடுகளின்[11] தன்மைக்கு ஏற்ப பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

i. பாதுகாப்புக்கான முறைப்பாடுகள்

ii. உரிமைகள் மற்றும் உரிமைகோரல்கள் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள்


iii. குற்ற விசாரணை

iv. உதவிக்கான முறைப்பாடு

5.1.2.1. - 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் ஒரு பிரிவின் கீழ் கிடைத்துள்ள முறைப்பாடுகள்

முறைப்பாடுகளின் தன்மை	எண்ணிக்கை
01. பாதுகாப்புக்கான முறைப்பாடு	109
02. உரிமை மற்றும் உரிமைகோரல் மீறல் தொடர்பான முறைப்பாடுகள்	80
03. குற்ற விசாரணை	57
04. உதவிக்கான முறைப்பாடுகள்	13
மொத்தம்	**259**

அட்டவணை - 03



வரைபடம் - 02

i. உரிமைகள் மற்றும் உரிமைகோரல்கள் தொடர்பான மீறல்கள்:

2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் உதவுதல் மற்றும் பாதுகாத்தல் சட்டத்தின் 3, 4 ஆம் பிரிவுகளுக்கு இணங்க உரிமைகள் மற்றும் உரிமைகோரல்கள் மீறல்கள் தொடர்பாக செய்த முறைப்பாடுகள் விசாரணை.

2021 ஆம் ஆண்டிலிருந்து முன்கொணரப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை	99
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் ஏற்கனவே கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை	80
மொத்தம்	**177**
விசாரணைகள் நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	56
மேலும் விசாரிக்கப்பட்டு வருகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை	123

வரைபடம் - 04

ii. குற்ற விசாரணை:

2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் உதவுதல் மற்றும் பாதுகாத்தல் சட்டத்தின் 8, 9 ஆம் பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பாக கிடைக்கும் முறைப்பாடுகள் விசாரணை.

[11] க.வே: ஒரு முறைப்பாட்டினுள் ஒன்று அல்லது அதற்கு அதிகமான கோரல்கள் உள்ளடங்குகின்றன.

2021 ஆம் ஆண்டிலிருந்து முன்கொணரப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை	70
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் ஏற்கனவே கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை	57
மொத்தம்	**127**
விசாரணைகள் நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	29
மேலும் விசாரிக்கப்பட்டு வருகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை	98

அட்டவணை - 05

iii. உதவிக்கான முறைப்பாடுகள்:

குற்றத்தால் பலியாகியமை காரணமாக ஏற்பட்ட ஏதாவது ஒரு நட்டத்திற்கு பாதிப்புக்கு அல்லது இழப்புக்கு நஷ்டஈடு வழங்குதல் அல்லது மறுசீரமைத்தல் அடங்கலாக பொருத்தமான நியாயமான உதவிகளை பெற்றுக் கொடுத்தல்.

2021 ஆம் ஆண்டிலிருந்து முன்கொணரப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை	51
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் ஏற்கனவே கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை	13
மொத்தம்	**64**
விசாரணைகள் நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	6
மேலும் விசாரிக்கப்பட்டு வருகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை	58

அட்டவணை - 06

5.1.3 - சமகால கட்புல மற்றும் செவிப்புல இணைப்பின் மூலம் சாட்சியங்களை வழங்குதல்:

குற்றத்தால் பலியான எவரேனும் ஒருவருக்கு அல்லது எவரேனும் சாட்சியாளர் ஒருவருக்கு பாதுகாப்பு பற்றிய அச்சம் அல்லது வேறு ஏதேனும் நியாயமான காரணம் ஆகியவற்றினால் நீதிமன்றத்தின் முன் தோன்றுவது கடினமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு வெளியால் அல்லது இலங்கையினுள் நீதிமன்றத்திற்கு வெளியால் வேறொரு இடத்திலிருந்து சமகாலத்தில் கட்புல மற்றும் செவிப்புல இணைப்பு வசதியின் மூலம் சாட்சியம் அளிப்பதற்கு 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான சட்டத்தின் 31 ஆம் பிரிவின் பிரகாரம் உரிமை உண்டு. அதன் நிமித்தம் தேவையான தொழில் நுட்ப உதவி நீதிமன்றத்தின் சட்டப் பிரிவின் மூலம் வழங்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் கீழ்காணும் வழக்கு நடவடிக்கைகளுக்கு சட்டப் பிரிவின் மூலம் சமகாலத்தில் கட்புல மற்றும் செவிப்புல இணைப்பு வசதியின் ஊடாக சாட்சிகளை முன்னெடுத்து நடத்துவதற்கு தேவையான வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதே போல் கட்புல மற்றும் செவிப்புல இணைப்பு வசதியின் மூலம் சாட்சியங்கள் வழங்கப்பட்டுள்ள வழக்கு நடவடிக்கைகளின் எண்ணிக்கை 06 ஆகும்.

5.2 அரவணைப்புப் பிரிவு

2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் உதவுதல் மற்றும் பாதுகாத்தல் சட்டத்தின் கீழ், குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் பாதுகாப்பு வழங்கத் தேவையான நடவடிக்கைகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி பாதுகாப்பு கோரிக்கைகள் இரண்டு வழிகளில் அரவணைப்புப் பிரிவுக்கு கிடைக்கின்றன.

1. **சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் பாதுகாப்புக் கோரி அதிகார சபைக்கு குறிப்பீடு செய்யப்படும் முறைப்பாடுகள்**
2. **சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் நீதிமன்றங்கள் மற்றும் ஆணைக்குழுக்குழுக்கள் ஆகியவற்றில் இருந்து குறிப்பீடு செய்யப்படும் கட்டளைகள்**

முறைப்பாடுகள் அல்லது நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழுவின் உத்தரவுகள் பாதுகாப்புப் பிரிவுக்கு கிடைத்த பின்னர், குற்றத்தால் பலியானவருக்கு அச்சுறுத்தல்கள் உள்ளனவா என்பது பற்றி குற்றத்தால் பலியானவர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் உதவும் மற்றும் பாதுகாப்பு அளிக்கும் பிரிவிலிருந்து அச்சுறுத்தல் மதிப்பீட்டு அறிக்கைகளை அழைக்க பாதுகாப்புப் பிரிவு ஏற்பாடு செய்யும். மேலும் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பான சாட்சிகள், தொடர்புடைய அச்சுறுத்தல் மதிப்பீட்டு அறிக்கைகள் ஆகியவற்றின்படி, குற்றத்தால் பலியான ஒருவருக்கு அல்லது சாட்சியாளர் ஒருவருக்கு அத்தகைய அச்சுறுத்தல்களின் தன்மை மற்றும் அளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தேவையான பாதுகாப்பு வழங்கப்படுகின்றது. அச்சுறுத்தல் மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைக்கும் வரை குற்றத்தால் பலியான நபருக்கு அல்லது தொடர்புடைய சாட்சியாளருக்கு இடைக்காலப் பாதுகாப்பை வழங்க தேவையான ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன.

5.2.1- முறைப்பாடுகள் பற்றிய முன்னேற்றம்; பாதுகாப்புக்கான கோரிக்கைகள்:

ஆண்டு	முறைப் பாடுகள் எண்ணிக்கை	விசாரிக்கப்பட்டும் மற்றும் இடைக்கால பாதுகாப்பு வழங்கப்பட்டும் வருகின்ற முறைப் பாடுகள் எண்ணிக்கை	பாதுகாப்பு வழங்கப் பட்டு வருகின்ற முறைப் பாடுகள் எண்ணிக்கை	நிறைவு செய்யப் பட்டுள்ள முறைப் பாடுகள் எண்ணிக்கை	சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு என குறிப்பீடு செய்யப் பட்டுள்ள முறைப் பாடுகள் எண்ணிக்கை
முன்னைய ஆண்டுகளில் இருந்து முன்கொணரப் படும் முறைப் பாடுகள்	159	14	58	86	01
2022	109	72	26	11	-
மொத்தம்	**268**	**86**	**84**	**97**	**01**

அட்டவணை - 09

- 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் கட்புல மற்றும் செவிப்புல இணைப்பு வசதியின் ஊடாக பாதுகாப்புப் பிரிவு 2022 ஆம் ஆண்டில் 02 சாட்சிகளை பதிவு செய்தது.

- 2022.01.01 ஆம் திகதி முதல் 2022.12.31 ஆம் திகதி வரை நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்க அதிகார சபையின் போக்குவரத்து வசதிகளின் கீழ் பாதுகாப்பு வழங்கப்பட்ட குற்றத்தால் பலியான நபர்களின் எண்ணிக்கை பத்து (10) ஆகும். மேலும் 2022 ஆம் ஆண்டில் 41 பயணங்களில் போது அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

5.2.2 நீதிமன்றங்களின் மற்றும் ஆணைக்குழுக்களின் உத்தரவுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:

ஆண்டு	நீதிமன்றங்களும் ஆணைக்குழுக்களும் பிறப்பித்த கட்டளைகள் எண்ணிக்கை	விசாரிக்கப்பட்டும் மற்றும் இடைக்கால பாதுகாப்பு வழங்கப்பட்டும் வருகின்ற முறைப் பாடுகள் எண்ணிக்கை	பாதுகாப்பு வழங்கப் பட்டு வருகின்ற முறைப் பாடுகள் எண்ணிக்கை	நிறைவு செய்யப் பட்டுள்ள முறைப் பாடுகள் எண்ணிக்கை
முன்னைய ஆண்டுகளில் இருந்து முன்கொணரப் படும் கட்டளைகள்	63	04	24	35
2022	12	04	06	2
மொத்தம்	**75**	**08**	**30**	**37**

அட்டவணை - 10

5.3 கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் பிரிவு

குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு (13) இன்படி, குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் மற்றும் உரிமைகோரல்கள் என்பன பற்றி பொது மக்களுக்குத் தெரியப்படுத்தும் வகையில், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் பிரிவின் கடமையாக, அரசாங்க மருத்துவ அதிகாரிகள், நன்னடத்தை மற்றும் சமூக சேவைகளில் ஈடுபடும் அரச ஊழியர்கள், சிறைச்சாலைகள் திணைக்கள ஊழியர்கள், இலங்கைப் பொலிஸ் போன்ற சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கு விழிப்பூட்டுதல், குற்றச் சம்பவங்களைக் குறைப்பதற்கான வழிகள் மற்றும் அந்த வழிமுறைகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் பதவி உயர்வு தொடர்பான கொள்கைகள், சட்டங்கள், நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றை மதிப்பாய்வு செய்தல் மற்றும் குற்றத்தால் பலியானவர்களினதும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் உரிமைகோரல்களையும் பாதுகாத்தல், பொருத்தமான கொள்கைகள், விதிகள் மற்றும் நடைமுறைகள் போன்றவற்றின் திருத்தம் மற்றும் செயல்படுத்தல் முதலிய கரும பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. அதன்படி, இந்தப் பிரிவினால் 2022 ஆம் ஆண்டில் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகிய இரண்டினதும் பணிகளையும் பின்வருமாறு மேற்கொள்ள முடிந்தது.

5.3.1 - நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்:

நிகழ்ச்சித் திட்டம் I

நீதிக்கான அணுகல் நடமாடும் சேவை

கௌரவ நீதியமைச்சரின் எண்ணக்கருவுக்கு இணங்க, "நீதிக்கான அணுகல்" என்ற ஒரு நாள் நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டம் வடமாகாணத்தில் 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெற்றது. இது அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு சேவைகளை வழங்குதல் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல் என்ற இரட்டை அணுகுமுறையைக் கொண்டிருந்தது. அதன்படி, எமது சேவைகளை வழங்குவதும், இந்த பணிக்கு அடிப்படையான நிறுவனமாக எமது அதிகார சபை பற்றி மக்களுக்குத் தெரிவிப்பதும் எமது பணியாக இருந்தது. ஆதலால் எமது அதிகார சபை சனவரி மாதம் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் கிளிநொச்சி ஊடகவியல் கல்லூரியிலும், சனவரி மாதம் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண ஊடகவியல் கல்லூரியிலும் அலங்காரக் கொட்டகையை நிர்மாணித்து நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. நடமாடும் சேவையுடன் இணைந்து 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் வடமாகாண மாவட்ட செயலகங்களில் பல்வேறு இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதன் மூலம் 960 அரச அதிகாரிகளுக்கு அதிகார சபையை நிறுவுவதற்கு அடிப்படையான சட்டம் மற்றும் அதிகார சபையின் வகிபங்கு என்பன பற்றி தெரிவிக்க முடிந்தது. மேலும், அந்தப் பகுதிகளில், குற்றத்தால் பலியானவர்களின்/சாட்சியாளர்களின் உரிமைகள் மற்றும் உரிமை மீறல்கள் என்பன தொடர்பான சேவைகளைப் பெற வந்த மக்களின் முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

திகதி/இடம் - (2022 சனவரி மாதம் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை) / **- கிளிநொச்சி**











<u>நிகழ்ச்சித் திட்டம் II</u>


வட மத்திய மாகாண குற்றப் பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கான விழிப்புணர்வு மற்றும் உணர்திறன் நிகழ்ச்சித் திட்டங்கள்

குறிக்கோள்- "நீதி சார்ந்த செயல்முறையில் வெற்றிபெறுவதற்கு குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதன் முக்கியத்துவமும் - பொலிஸ் அதிகாரிகளின் வகிபங்கும்" என்ற கருப்பொருளின் அடிப்படையில், வடமத்திய மாகாணத்தின் பொலிஸ் நிலையங்களில் உள்ள குற்றப் பிரிவுப் பொலிஸ் அதிகாரிகளுக்கு (72) தகவல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டம் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 ஆம் மற்றும் 4 ஆம் திகதிகளில்

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் அனுசரணையில் பொலன்னறுவை வெள்ளைக் கோயில் ஹோட்டல் வளாகத்தில் 4 நாட்கள் நடைபெற்று வெற்றிகரமாக நிறைவுற்றது. குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான சட்டம், பொலிஸ் பாதுகாப்புப் பிரிவு, அதிகார சபையின் செயல்பாடுகள் மற்றும் கடமைகள், பொது அதிகாரிகளின் பொறுப்பு, சமூக மற்றும் உளவியல் போன்ற பிரிவுகளில் இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் சூழல், தடயவியல் அதிகாரி மற்றும் பொலிஸ் பாதுகாப்புப் பிரிவின் நடைமுறை, உள்ளூர் கொள்கைகள் மற்றும் அதிகார சபையுடனான தொடர்பு, தற்போதைய அனுபவங்கள் முதலியன போன்ற விடயங்களிலான தொழில் நுட்ப அமர்வுகள் இதில் உள்ளடங்கியிருந்தன. இந்த தொழில் நுட்ப அமர்வுகளின் போது, அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் அடங்கலாக முகாமைத்துவ சபையின் நிபுணர்களால் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

திகதி/இடம் - 2022. 03. 03 மற்றும் 04 / சுது அறலிய ஹோட்டல் - பொலன்னறுவை

பங்குபற்றியவர்கள் - வட மத்திய மாகாணத்தின் அனைத்து பொலிஸ் நிலையங்களினதும் குற்றவியல் பிரிவுப் பொறுப்பதிகாரிகள்









<u>நிகழ்ச்சித் திட்டம் III</u>

ட்ரான்ஸ்பேரென்ஷி இன்டர்நெஷனல் நிறுவனத்துடன் இணைந்து நடத்திய வேலையரங்கு

Transparency International-Sri Lanka நிறுவனத்துடன் இணைந்து 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி ஏக்கல-ஜாஎல பிரதேச கிராமிய அபிவிருத்திப் பிரதிகளுக்கு (30) விழிப்பூட்டும் ஒரு நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டம் அதிகார சபைக்கும் மற்றும் அந்த நிறுவனத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் நடத்தப்பட்டது.

கொள்கை மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் பிரிவின் பணிப்பாளரினால் அதிகார சபையையும் அது வழங்கும் சேவைகளையும் பற்றிய ஒரு விரிவுரை நிகழ்த்தப்பட்டது.

திகதி/இடம் - 2022 மார்ச் 27 / ஏக்கல-ஜாஎல பிரதேசம்
பங்குபற்றியவர்கள் - ஏக்கல-ஜாஎல பிரதேசத்தின் 30 கிராமிய அபிவிருத்திப் பிரதிநிதிகள்




<u>நிகழ்ச்சித் திட்டம் IV</u>

களுத்துறை பொலிஸ் கல்லூரியுடன் இணைந்து பயிலுநர் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக நடத்திய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியிலிருந்து பயிற்சி பெற்று செல்லவிருந்த 218 பயிலுநர் உப பொலிஸ் பரிசோதகர்களுக்கு ஒரு நிகழ்ச்சித் திட்டமும் 800 பொலிஸ் பயிலுநர் உத்தியோகத்தர்களுக்கு இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களும் 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆம் மற்றும் 27 ஆம் திகதிகளில் களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இந்த அதிகார சபையின் தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் (சட்ட அமுலாக்கல்) ஆகிய அதிகாரிகள் வள நபர்களாக இருந்தனர்.

திகதி/இடம் - 2022. 07. 26 மற்றும் 27 / களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரி மண்டபம்
பங்குபற்றியவர்கள் - பயிலுநர் உப பொலிஸ் பரிசோதகர்கள் 218 மற்றும் பயிலுநர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 800









<u>நிகழ்ச்சித் திட்டம் V</u>

மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்காக நடத்திய நிகழ்ச்சித் திட்டம்

நீதிபதிகளை பயிற்றுவிக்கும் நிலையத்துடன் இணைந்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி மற்றும் தொழில் நுட்ப உதவியில் 40 மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு சட்டத்தை அமுலாக்குவது பற்றிய ஒரு விஷேட வேலையரங்கு 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் மற்றும் 07 ஆம் திகதிகளில் வாத்துவ ப்ளூவோட்டர் ஹோட்டலில் நடத்தப் பட்டது. இந்த வேலையரங்கின் போது உயர் நீதிமன்ற நீதிபதி யசந்த கோதாகொட, இந்த அதிகார சபையின் தலைவர், முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினது கொள்கை நிபுணரும் அரச துறை பிரதானியுமான திருமதி சந்திரிக்கா கருணாரத்ன ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்தினர்.

திகதி/இடம் - 2022. 08.06 மற்றும் 07 / ப்ளூவோட்டர் ஹோட்டல் - வாத்துவ

பங்குபற்றியவர்கள் - மேல் நீதிமன்ற நீதிபதிகள் 40






<u>நிகழ்ச்சித் திட்டம் VI</u>

நீதிவான் நீதிமன்றங்களின்/மாவட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்காக நடத்திய நிகழ்ச்சித் திட்டம்

நீதிபதிகளை பயிற்றுவிக்கும் நிலையத்துடன் இணைந்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி மற்றும் தொழில் நுட்ப உதவியில் நீதிவான் நீதிமன்றங்களின்/மாவட்ட நீதிமன்றங்களின் 40 நீதிபதிகளுக்கு சட்டத்தை அமுலாக்குவது பற்றிய ஒரு விஷேட வேலையரங்கு 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் மற்றும் 21 ஆம் திகதிகளில் வஸ்கடுவ சிற்ரஸ் ஹோட்டலில் நடத்தப் பட்டது. இந்த வேலையரங்கின் போது உயர் நீதிமன்ற நீதிபதி யசந்த கோதாகொட, இந்த அதிகார சபையின் தலைவர், முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினது கொள்கை நிபுணரும் அரச துறை பிரதானியுமான திருமதி சந்திரிக்கா கருணாரத்ன ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்தினர்.

திகதி/இடம் - 2022. 08. 20 மற்றும் 21/ சிற்ரஸ் ஹோட்டல் - வஸ்கடுவ

பங்குபற்றியவர்கள் - நீதிவான் நீதிமன்றங்களின்/மாவட்ட நீதிமன்றங்களின் 40 நீதிபதிகள்






நிகழ்ச்சித் திட்டம் VII

பொலிஸ் பாதுகாப்பு மற்றும் உதவிப் பிரிவின் புதிய உத்தியோகத்தர்களுக்காக நடத்திய தொழில் நுட்ப வேலையரங்கு

இந்த அதிகார சபைக்கு இணைக்கப்பட்டுள்ள பொலிஸ் பாதுகாப்பு மற்றும் உதவிப் பிரிவின் 25 புதிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி பத்தரமுல்லவிலுள்ள வோட்டர்ஸ் எஜ் (Water's Edge) ஹோட்டலில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினது அனுசரணையில் ஒரு தொழில் நுட்பப் பயிற்சி வேலையரங்கு நடத்தப்பட்டது. இந்த வேலையரங்கில் குறிப்பாக குற்றத்தால் பலியானவர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் பாதுகாப்பதற்கும் உரிய சட்டத்தை செயற்படுத்துதல் தவிரந்த மேலும் தற்பொழுது எதிர்நோக்குகின்ற சில பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. இந்த பயிற்சி வேலையரங்கின் போது உயர் நீதிமன்ற நீதிபதி யசந்த கோதாகொட, இந்த அதிகார சபையின் தலைவர், முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினது கொள்கை நிபுணரும் அரச துறை பிரதானியுமான திருமதி சந்திரிக்கா கருணாரத்ன ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்தினர்.

திகதி/இடம் - 2022. வோட்டர்ஸ் எஜ் ஹோட்டல்

பங்குபற்றியவர்கள் - குற்றத்தால் பலியானவர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் அதே போல் பாதுகாப்பதற்குமான பொலிஸ் பாதுகாப்புப் பிரிவின் பொலிஸ் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

திகதி/இடம் - 2022.08.26 / பத்தரமுல்ல வோட்டர்ஸ் எஜ் (Water's Edge) ஹோட்டல்







நிகழ்ச்சித் திட்டம் VIII

மத்திய மாகாணத்தின் மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்காக நடத்திய நிகழ்ச்சித் திட்டம்

நீதிபதிகளை பயிற்றுவிக்கும் நிலையத்துடன் இணைந்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி மற்றும் தொழில் நுட்ப உதவியில் 37 மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான சட்டத்தை அமுலாக்குவது பற்றிய ஒரு விஷேட வேலையரங்கு 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆம் மற்றும் 16 ஆம் திகதிகளில் தம்புள்ள ஜெட்விங் ஹோட்டலில் நடத்தப் பட்டது. இந்த வேலையரங்கின் போது உயர் நீதிமன்ற நீதிபதி யசந்த கோதாகொட, இந்த அதிகார சபையின் தலைவர், முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினது கொள்கை நிபுணரும் அரச துறை பிரதானியுமான திருமதி சந்திரிக்கா கருணாரத்ன ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்தினர்.

திகதி/இடம் - 2022.10.15 மற்றும் 16

பங்குபற்றியவர்கள் - 37 மேல் நீதிமன்ற நீதிபதிகள்









<u>நிகழ்ச்சித் திட்டம் IX</u>

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நீதிவான் நீதிமன்றங்களின்/மாவட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்காக நடத்திய நிகழ்ச்சித் திட்டம்

நீதிபதிகளை பயிற்றுவிக்கும் நிலையத்துடன் இணைந்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி மற்றும் தொழில் நுட்ப உதவியில் பிரதானமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண நீதிவான் நீதிமன்றங்களின் / மாவட்ட நீதிமன்றங்களின் 54 நீதிபதிகளுக்கு ஒரு விஷேட விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டம் 2022 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 03 ஆம் மற்றும் 04 ஆம் திகதிகளில் ஹபரன விலேஜ் ஹோட்டலில் நடத்தப் பட்டது. இந்த வேலையரங்கின் போது உயர் நீதிமன்ற நீதிபதி யசந்த கோதாகொட, இந்த அதிகார சபையின் தலைவர், முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினது கொள்கை நிபுணரும் அரச துறை பிரதானியுமான திருமதி சந்திரிக்கா கருணாரத்ன ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்தினர்.

திகதி/இடம் - 2022.12.03 மற்றும் 04 ஹபரன விலேஜ் ஹோட்டல் - ஹபரன

பங்குபற்றியவர்கள் - வட கிழக்கு மாகாண நீதிவான் நீதிமன்றங்களின் / மாவட்ட நீதிமன்றங்கள் 54 நீதிபதிகள்









நிகழ்ச்சித் திட்டம் X

குற்றத்தால் பலியானவர்கள் பற்றிய மதிப்பாய்வை அடிப்படையாகக் கொண்டு களுத்துறை மாவட்டத்தில் நடத்திய விழிப்புணர்வு முன்னோடி நிகழ்ச்சித் திட்டம்

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் போது பிரதானமாக மாவட்டத்தில் தேர்ந்தெடுத்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் பணியாற்றுகின்ற கிராம உத்தியோகத்தர்களையும் மற்றும் கள உத்தியோகத்தர்களையும் விழிப்பூட்டுவதன் ஊடாக அவர்களினால் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் குற்றத்தினால் பலியான குடும்பங்களை இனங்கண்டு மதிப்பாய்வை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் முதல் கட்டமாக களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவில் பணியாற்றுகின்ற 60 கிராம உத்தியோகத்தர்களுக்கு ஒரு நிகழ்ச்சித் திட்டமும் மற்றும் 60 கள உத்தியோகத்தர்களுக்கு மற்றொரு நிகழ்ச்சித் திட்டமும் என இரண்டு விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் திசம்பர் மாதம் 12 ஆம் திகதி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டன.

திகதி/இடம் - 2022.12.09 களுத்துறை மாவட்ட செயலக கேட்போர்கூடம்

பங்குபற்றியவர்கள் - 60 கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் 60 கள உத்தியோகத்தர்கள்








5.3.2 - அதிகார சபையின் வருடாந்த அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்:

அதிகார சபையின் 2020 வருடாந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு நீதித்துறை பிரிவின் ஊடாக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் பிரதிகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

5.3.3- குற்றத்தால் பலியானவர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் உதவுதல் மற்றும் பாதுகாப்பு அளித்தல் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் அதற்கான நிலையத்தைத் தாபித்தல்:

குற்றத்தால் பலியானவர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் உதவுதல் மற்றும் பாதுகாப்பு அளித்தல் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் முகமாக ஒரு நிலையம் 2021 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. அதன் நிமித்தம் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இந்த அதிகார சபையின் ஊழியர்கள் இந்தப் புத்தகங்களை பயன்படுத்துகின்றனர்.

5.3.4- ஏனைய விடயங்கள்:

a. குற்றத்தால் பலியானவர்களுக்கு உதவும் சர்வதேச (Victim Support Asia) நிலையத்துடன் இணைந்து அதன் போட்டி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒருங்கிணைப்பில், இந்த அதிகார சபை வழங்கும் உதவிகளை எதிர்பார்த்த குற்றத்தால் பலியான இரண்டு நபர்களுக்கு US$1000 (ரூ. 330,000.00) வீதம் அந்த நபர்களுக்கு குற்றத்தால் ஏற்பட்டிருந்த இழப்புகளை குறைப்பதற்கு உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
b. பரிவர்த்தனைக்கான சர்வதேச நிலையத்துடன் (IOM) இணைந்து இந்த அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு (21 பேர்கள்) ஆட்கடத்தல் வணிகம் தொடர்பாக ஒரு இரண்டு நாள் வேலையரங்கு கொழும்பு MovenPick ஹோட்டலில் நடத்தப்பட்டது.
c. பாதுகாப்பு அமைச்சிலுள்ள ஆட்கடத்தல் வணிகத்திற்கு எதிரான சிறப்புச்செயலணியின் (Anti-Human Trafficking Task Force) உறுப்பு நிறுவனமாக அதிகார சபை தொழிற்படுதல் மற்றும் அதன் நிமித்தம் அவ்வப்பொழுது தேவையான அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பித்தல்.
d. வெளிவிவகாரங்கள் அமைச்சின் Universal Periodic Review 4 என்ற சுழற்சிக்கு தேவையான அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பித்தல்.
e. நீதி அமைச்சின் ஆண்/பெண் சமத்துவம் மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் பற்றிய தேசிய செயல் திட்டத்திற்கு அதிகார சபையின் ஒத்துழைப்பை வழங்குதல்.
f. பாதுகாப்பான இல்ல வசதிகளுக்கன வழிகாட்டல்களை தயாரித்தல்.
g. குற்றத்தால் பலியானவர்களுக்கு உதவுவதற்கான நிதியத்திலிருந்து நிதிகளை பெற்றுக் கொடுப்பதற்கான வழிகாட்டல்களை தயாரித்தல்.

5.4 நிருவாக மற்றும் முகாமைத்துவப் பிரிவு

அதிகார சபையின் அலுவலக செயற்பாடுகளின் நிமித்தம் தேவையான உதவிகளை நிதமும் பெற்றுக் கொடுத்து, அதனூடாக தனது சேவை பெறுநர்களுக்கு விஷேட சேவைகளை வழங்குவது நிருவாக மற்றும் முகாமைத்துவப் பிரிவின் அடிப்படைப் பணியாகும். அதிகார சபைக்கு தேவையான மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் என்பவற்றை வழங்குதல் மற்றும் நிருவாகக் கொள்கைகளை செயற்படுத்தல் ஆகியனவும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

5.4.1- உள்நாட்டு / வெளிநாட்டுப் பயிற்சிகள்:

- ✓ குறித்த காலப் பகுதியில் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் எவரும் பங்குபற்றவில்லை.
- ✓ உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. அந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

திகதி	பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	காலம்	பங்குபற்றிய நபர்கள்	செலவு (ரூ.)	வளநபர் பங்களிப்பு
2022.06.15	Zoom தொழில் நுட்பப் பாவனை பற்றிய (Zoom link தயாரித்தல், Zoom Link Update செய்தல், Zoom ஊடக வசதியின் ஊடாக நடத்தப்படும் கலந்துரையாடல்களை ஒலிப்பதிவு செய்தல்	06 மணித்தியாலங்கள்	**10** (உதவிப் பணிப்பாளர் - சட்டம் 01, முகாமைத்துவ சபை செயலாளர் 01, சட்ட உத்தியோகத்தர் 01, விசாரணை அதிகாரிகள் 05, முகாமைத்துவ உதவியாளர்கள் 02)	18,000.00	தகவல் தொழில் நுட்ப வளங்கள் அபிவிருத்தி அதிகார சபை (மேல் மாகாணம்)
2022.12.23	உற்பத்தித்திறனின் ஊடாக அதிகார சபையின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல் மற்றும் அதிகார சபையின் இலக்குகளைப் பூர்த்தி செய்தல்	ஒரு நாள் வேலையரங்கு	**ஊழியர்கள் 31**	117,648.00	தேசிய உற்பத்தித் திறன் நிலையம்

அட்டவணை - 11

5.4.2- கொள்வனவு (கொள்வனவுத் திட்டத்திற்கு இணங்க):

- ✓ அரவணைப்பு இல்லத்திற்கு தேவையான வீட்டு உபகரணங்கள் கொள்வனவு பற்றிய விபரங்கள்

தொடர் இலக்கம்	திகதி	பொருட்கள் பற்றிய விபரம்	செலவு	கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனம்
01	2022.03.22	அரவணைப்பு இல்லத்திற்கு தேவையான வீட்டுத் தளபாடங்கள் - கட்டில் 06, டவல் இறாக்கை 06, உணவு மேசை கதிரை 06, உணவு மேசை 01	317,844.00	அரச மரக் கூட்டுத் தாபனம்
02	2022.03.22	அரவணைப்பு இல்லத்திற்கு தேவையான வீட்டுத் தளபாடங்கள் - சிறிய எழுதும் மேசை 04, மரத்தாலான / அலுமாரி 03, கட்டில் உடன் கூடிய மெத்தை வசதியுடைய கதிரை 06	246,810.00	ரிச்சட் பீரிஸ் கம்பனி (ஆர்பிகோ)
03	2022.03.30	அரவணைப்பு இல்லத்திற்கு தேவையான வீட்டுத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் - மொத்தை 06, தொலைக்காட்சிப் பெட்டி 01, சோறு சமைக்கும் அடுப்பு 01, எரிவாயு அடுப்பு 01	140,623.00	சிங்கர் கம்பனி
04	2022.12.29	அரவணைப்பு இல்லத்திற்கு ஜன்னல் சட்டகங்கள் பொருத்துதல்	387,200.00	S.S. ATTIC நிறுவனம்
05	2022.12.30	அரவணைப்பு இல்லத்திற்கு தேவையான சமையலறை / வீட்டு உபகரணங்கள் கொள்வனவு	82,101.00	பல நிறுவனங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டது.

அட்டவணை - 12

5.4.3- மனித வளங்கள் முகாமைத்துவம்:

அதிகார சபையினது பதவியணியில் நிலவும் பதவி வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் புதிய பதவிகளை உருவாக்குதல் தொடர்பாக பின்வருமாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- ✓ அரவணைப்பு இல்லப் பொறுப்பாளர் என்ற ஒரு பதவி புதிதாக அனுமதித்துக் கொள்ளப் பட்டது.
- ✓ வெற்றிடம் நிலவும் அரவணைப்பு விடயப் பணிப்பாளர், அரவணைப்பு உத்தியோகத்தர், சட்ட உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள நிதி அமைச்சுக்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- ✓ 2023.12.23 ஆம் திகதி அதிகார சபையின் ஒட்டுமொத்தப் பதவியணிக்கும் ஒரு உற்பத்தித் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (ஒரு நாள் வேலையரங்கு) மாலபே தலாஹேன கல்விக் கூட்டுறவு நிறுவகத்தில் நடத்தப்பட்டது.

முகாமைத்துவ சபை மற்றும் ஏனைய கூட்டங்கள்

முகாமைத்துவ சபைக் கூட்டங்கள் - 09

விஷேட முகாமைத்துவ சபைக் கூட்டங்கள் - 02

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் - 03

கௌரவ அமைச்சர்களுடனான/செயலாளர்களுடனான கூட்டங்கள் - 03

சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகளின் கூட்டங்கள் - 06

5.5 நிதிப் பிரிவு

அதிகார சபையின் நிதிப் பிரிவு, அதிகார சபைக்கு தேவையான நிதிகளைப் பெற்றுக் கொள்ளல், அந்த நிதிகளை முகாமை செய்தல் மற்றும் பல வகை சொத்துக்களுக்கு நிதிகளை செலவு செய்தல் முதலிய கரும விடயங்களுக்கு பொறுப்புடையதாகும். நிதிப் பிரிவினால் அதிகார சபையின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் முகமாக அனைத்து செயற்பாடுகளுக்கும் உதவுவதற்கு முக்கியமான வினைத் திறன் வாய்ந்த நிதி முகாமைத்துவமும் மற்றும் நிதிக் கட்டுப்பாடும் உறுதிசெய்யப்படுகின்றன.

5.5.1 - 2022

5.5.2 /12/31 ஆம் திகதிக்கு உரிய மூலதன மற்றும் மீண்டெழும் செலவினம் பற்றிய சுருக்க அறிக்கை:

விபரம்	2022 ஆம் ஆண்டிற்கான நிதியேற்பாடு (ரூ.மில்.)	திருத்திய நிதியேற்பாடு 2022 (ரூ.மில்.)	விடுவிக்கப்பட்ட நிதியேற்பாடு (ரூ.மில்.)	2022.12.31 ஆம் திகதிக்கான செலவு (ரூ.மில்.)	2022.12.31 ஆம் திகதிக்கான நிதி முன்னேற்றம் - விடுவிக்கப் பட்ட நிதியேற் பாடுகளில் (%)	2022.12.31 ஆம் திகதிக்கான நிதி முன்னேற்றம் - ஒதுக்கப் பட்ட நிதியேற் பாடுகளில் (%)
மீண்டெழும் செலவினம்	49.00	49.47	43.98	42.87	97 %	87 %
மூலதன செலவினம்	8.00	7.75	2.98	2.54	85 %	33 %
மொத்தம்	**57.00**	**57.22**	**46.96**	**45.41**	**97%**	**79%**

அட்டவணை - 13

5.5.2 - அதிகார சபையின் பாதுகாப்பு நிதியம்:

2015 இன் 04 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கு உதவுதல் மற்றும் பாதுகாப்பளித்தல் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம், அதிகார சபையின் பாதுகாப்பு நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குரிய அந்த நிதியம் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

2022.01.01 ஆம் திகதிக்கு முன்கொணரப்பட்ட நிலுவை	ரூ. 12,782,994.00
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிதியத்திற்கு சேர்ந்த தொகைகள்	ரூ. 3,491,856.00
2022.12.31 ஆம் திகதிக்கான நிலுவை	ரூ 16,274,850.00

அட்டவணை -14


06. நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கை

FINAL ACCOUNTS
2022

THE NATIONAL AUTHORITY FOR THE PROTECTION OF VICTIMS OF CRIME AND WITNESSES

MINISTRY OF JUSTCIE, PRISON AFFAIRS AND CONSTITUTIONAL REFORMS

1ST FLOOR, 428/11A, DENZIL KOBBEKADUWA MAWATHA, BATTARAMULLA



NOTES TO THE FINANCIAL STATEMENTS FOR THE YEAR ENDED 31.12.2022

ACCOUNTING POLICIES

1. CORPORATE INFORMATION

1.1. Domicile and Legal Form

National Authority for the Protection of Victims of Crime & Witnesses established by Assistance to and Protection of Victims of Crime & Witnesses Act No. 04 of the year 2015 by the parliament of Democratic Socialist Republic of Sri Lanka and expanding its area of services further, under the Ministry of Justice. The head office is located at No. 428/11 A, Denzil Kobbekaduwa Mawatha, Battaramulla, Sri Lanka.

1.2 Principal Activities and Nature of Operations

With the aspect of achieving the objects of the Act, the duties and the functions of the Authority are enlisted under Section 13 of Assistance to and Protection of Victims of Crime & Witnesses Act No. 04 of 2015.

1.3 The Number of Employees

The number of employees at the end of the year 2022 was 34.

2 BASIS OF PREPARATION

2.1 Statement of Compliance.

The financial statements of National Authority for the Protection of Victims of Crime & Witnesses comprise the Statement of Financial Position, Statement of Financial Performance, Statement of Cash Flow, Statement of Changes in Equity and Notes to the Financial Statements and other explanatory information. These statements are prepared in accordance with the Sri Lanka Public Sector Accounting Standards (SLPSAs) laid down by the Institute of Chartered Accountants of Sri Lanka (ICASL).

2.2. Basis of Measurement

The financial Statements have been prepared on the historical cost Basis.

No adjustments have been made for inflationary factors in the financial statements

2.2 Functional and presentation Currency.

These financial Statements are presented in Sri Lankan Rupees, which is the National Authority for the Protection of Victims of Crime & Witnesses functional currency.

3 SIGNIFICANT ACCOUNTING POLICIES

These accounting policies set out bellow have been applied consistently to all periods presented in these financial statements.

3.1. Property, Plant and Equipment

The cost of Property, Plant and Equipment is the cost of acquisition or construction together with any expenses incurred in bringing the asset to its working condition for its intended use. Subsequent to the initial recognition as an asset at cost, revalued assets are carried at revalued amount less any subsequent deprecation thereon. All other Property, Plant and Equipment are stated at cost less accumulated depreciation. Where an item of Property, plant and equipments comprises major components having different useful lives, they are accounted for as separate item of Property, plant and equipments.

The asset's residual values, useful lives and methods of depreciation are reviewed, and adjusted if appropriate, at each financial year end.

Property, Plant and Equipment- Received as Grant

